தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

5.04.2013 A.M

## விளைச்சலோ அதிகம்; விலையோ குறைவு



திருவள்ளூர் மாவட்டத்தில் மல்லி, ரோஜா, சாமந்தி உள்ளிட்ட பூக்கள் அதிக விளைச்சல் உள்ளதால் மார்க்கெட்டில் பூக்களின் விலை குறைந்து வருகிறது.

இந்நிலையில், இன்னும் சில தினங்களில் முகூர்த்த நாள்கள் தொடர்ந்து வருவதையொட்டி குறைந்து வரும் பூக்களின் விலையால் மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

திருவள்ளூர் மாவட்டத்தில் பூண்டி, மோவூர், சிற்றம்பாக்கம், எல்லாபுரம், பெரியபாளையம், ஊத்துக்கோட்டை, திருத்தணி உள்ளிட்ட பகுதிகளில் மல்லி, முல்லை, சாமந்தி, ரோஜா ஆகிய பூந்தோட்டங்கள் உள்ளன.

இங்கிருந்து பறிக்கப்படும் மலர்கள் திருவள்ளூர் மார்க்கெட், கோயம்பேடு மற்றும் மாவட்டத்தில் உள்ள உழவர் சந்தைகள் ஆகிய பகுதிகளுக்கு எடுத்துச் சென்று விற்கப்படுகின்றன.

விளைச்சல் குறைவு: கடந்த சில மாதங்களுக்கு முன்பு கடும் பணி காரணமாக பூக்களின் விளைச்சல் மிகவும் குறைவாக இருந்து வந்தது.

இதையொட்டி மார்க்கெட், உழவர் சந்தை போன்ற பகுதிகளுக்கு பூக்களின் வரத்து குறைந்திருந்ததால் விலை கடுமையாக அதிகரித்திருந்தது.

மல்லிகைப்பூ ஒரு கிலோ ரூ.400 வரையிலும், ரோஜாப்பூ ஒரு கிலோ ரூ.140 வரையிலும் விற்பனை செய்யப்பட்டு வந்தன.

இதன் காரணமாக கடைகளில் மல்லிகைப்பூ ஒரு முழம் ரூ.30 முதல் ரூ.40 வரை விற்பனை செய்யப்பட்டது. ரோஜா மாலைகளும் ரூ.150 முதல் 300 வரை விலைப் போயின.

அதிகரித்த விளைச்சல்: இந்நிலையில் தற்போது திருவள்ளூர் மாவட்டத்தில் பூக்களில் விளைச்சல் அதிகரித்துள்ளது. இதனால் படிப்படியாக பூக்களின் விலையும் குறைந்து வருகிறது.

இதன்படி, கடந்த வாரம் (ஒரு கிலோ) மல்லி ரூ.120, கனகாம்பரம் ரூ. 400, சாமந்தி ரூ.150, துளிர் சாமந்தி ரூ.60, ரோஜா ரூ.90, சம்பங்கி ரூ.80 என விற்பனை செய்யப்பட்டன.

வியாழக்கிழமை நிலவரப்படி, ஒரு கிலோ மல்லி ரூ.80, கனகாம்பரம் ரூ.300, சாமந்தி ரூ.100, துளிர் சாமந்தி 40, ரோஜா ரூ.50, சம்பங்கி ரூ.60 என விற்கப்படுகின்றன.

இதே போல, கடந்த சில தினங்களுக்கு முன்பு வரை ஒரு கட்டு (20 பூக்கள்) ரூ.130 வரை விற்கப்பட்டு வந்த "பெங்களூரு ரோஸ்' வியாழக்கிழமை ரூ.80-க்கு விற்கப்பட்டது.

இதே நிலை நீடித்தால் இந்த மாத இறுதிக்குள் மல்லி கிலோ ரூ.30 வரை விற்கப்படும் என வியாபாரிகள் தெரிவித்தனர்.

## பசுந்தீவன புல் சாகுபடி செய்ய மானியம்

பசுந்தீவனப் புல் சாகுபடி செய்வதற்காக அரசு மானியம் வழங்குகிறது என்றார் தஞ்சாவூர் மாவட்ட வருவாய் அலுவலர் சீ. சுரேஷ்குமார்.

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரகத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற பசுந்தீவன விதைகள் வழங்கும் விழாவில் அவர் மேலும் பேசியது:

வறட்சி காலங்களில் கால்நடைகளுக்குத் தேவையான தீவனத்தை வழங்க வேண்டும் என்ற நோக்கத்தில் தமிழக முதல்வர் மானிய விலையில் தீவனங்களை வழங்குகிறார். மேலும், தீவனப் புல் சாகுபடி செய்வதற்கு ஏக்கருக்கு, 50 சதம் மானியம் வழங்கப்படுகிறது.

இதனால், வறட்சி காலங்களில் தேவைப்படும் தீவனத்தை உற்பத்தி செய்து பால் உற்பத்தியாளர் சங்கத்தில் அன்றைய சந்தை விலைக்கே விற்பனை செய்யவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஒரு ஏக்கருக்கு 16 கிலோ விதை தேவைப்படும். அதற்கான விதை செலவு ரூ. 860 ஏற்படும்.

அதில், 50 சதம் மானியம் வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் தஞ்சை மாவட்டத்தில் 700 ஏக்கருக்கு மானியம் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்றார் சுரேஷ்குமார்.

கால்நடைத் துறை இணை இயக்குநர் (பொறுப்பு) முகமது கனி, துணை இயக்குநர் (பொறுப்பு) நெடுஞ்செழியன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## மேட்டூர் அணை நீர்மட்டம்: 26.85 அடி

மேட்டூர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை மாலை 26.85 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 91 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 496 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

## நாமக்கல்லில் ரூ.60 லட்சத்துக்கு பருத்தி ஏலம்

நாமக்கல் வேளாண் கூட்டுறவு விற்பனை நிலையத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற பருத்தி ஏலத்தில் ரூ.60 லட்சத்துக்கு பருத்தி வர்த்தகம் நடைபெற்றது.

நாமக்கல் - திருச்செங்கோடு சாலையிலுள்ள நாமக்கல் வேளாண் கூட்டுறவு விற்பனை நிலையத்தில் வாரம் தோறும் வியாழக்கிழமை பருத்தி ஏலம் நடைபெறும். இந்த வாரம் வியாழக்கிழமை நடைபெற்ற ஏலத்துக்கு நாமக்கல், திருச்சி, சேலம், பெரம்பலூர் மாவட்டங்களிலிருந்து சுமார் 4000 மூட்டைகள் பருத்தி வரப்பெற்றன.

அவற்றில் ஆர்சிஹெச் ரகம் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.4,200 முதல் ரூ.4,750 வரையும், டிசிஹெச் ரகம் ரூ.4,600 முதல் ரூ.5,700 வரையும், சுரபி ரகம் ரூ.4,800 முதல் ரூ.5,200 வரையும் விலைபோயின. ஆக மொத்தம் ரூ.60 லட்சத்துக்கு பருத்தி ஏலம் நடைபெற்றதாக கூட்டுறவு சங்க அலுவலர்கள் தெரிவித்தனர்.

ஆனால், கடந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் ஆர்சிஹெச் ரகம் குவிண்டால் ரூ.4,610 முதல் ரூ.4,950 வரையும், டிசிஹெச் ரகம் ரூ.4,701 முதல் ரூ. 5,369 வரையும், சுரபி ரகம் ரூ.4,910 முதல் ரூ.5,469 வரையும் ஏலம் போனது. மொத்தம் 5,500 பருத்தி மூட்டைகள் வரப்பெற்று, ரூ. ஒரு

கோடி ரூபாய்க்கு விற்பனை நடைபெற்றது. தற்போது பருத்தி அறுவடை சீசன் முடிந்துள்ளதால் பருத்தி வரத்தும் குறைந்ததாக விவசாயிகள் தெரிவித்தனர்.

## பவானிசாகர் நீர்மட்டம்

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை நிலவரப்படி 44.20 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 1,723 கனஅடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 150 கனஅடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 3.19 டி.எம்.சி.

## விருதுநகரில் உழவர் பெருவிழா ஏப். 14இல் துவக்கம்

விருதுநகர் மாவட்டத்தில் வேளாண்மைத்துறையின் சார்பில் உழவர் பெருவிழா வருகிற 14ஆம் தேதி தொடங்கி, தொடர்ந்து மே 20ஆம் தேதி வரை நடைபெற இருக்கிறது.

விவசாயிகள் அனைவரும் நவீன சாகுபடி பற்றி அறிந்து கொள்ளவும், வேளாண்மைத் துறை அதிகாரிகளின் ஆலோசனை உள்ளிட்டவைகளை ஒரே இடத்தில் பெறுவதற்காகவும், கடந்தாண்டு முதல் மாவட்டந்தோறும் உழவர் பெருவிழா நடத்தப்பட்டு வருகிறது.

அதன் அடிப்படையில், விருதுநகர் மாவட்டத்தில் நிகழாண்டில் குறிப்பிட்ட நாளில் தொடங்கி உழவர் பெருவிழா, தொடர்ந்து நடைபெற இருக்கிறது.

அந்தந்த பகுதி வட்டார வேளாண்மை வளர்ச்சி அலுவலர்களால் நடத்தப்படும் இவ்விழாவில் வேளாண்மை சம்பந்தப்பட்ட அனைத்து துறை அதிகாரிகளும் கலந்து கொள்வார்கள். அதோடு, பயனுள்ள கண்காட்சி, சாதனை விவசாயியின் வெற்றிக் கதை குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட இருக்கிறது.

இதையொட்டி, விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஊர்தி ஊர்வலம் உள்ளிட்டவைகளும் நடத்தப்படும். இந்நிகழ்ச்சியில் அந்தந்த வட்டாரப் பகுதியில் வசித்து வரும் விவசாயிகள் அனைவரும் பங்கேற்க இருக்கிறார்கள்.

இதில், பங்கேற்கும் விவசாயிகள் அனைவருக்கும் விவசாயம் மேற்கொள்ளும் முறைகள் குறித்தும், காலநிலைக்கேற்ப விதைகளைப் பயன்படுத்தும் முறைகள் உள்ளிட்ட விவசாயிகளின் கேள்விகள் அனைத்துக்கும் வேளாண்மை அதிகாரிகள் விளக்கம் அளிக்க உள்ளனர். இதில்,

விவசாயிகளுக்கு பிற்பகல் உணவு வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக வேளாண்மை அலுவலக வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன.

### இயற்கை விவசாயக் கண்காட்சி

புதுச்சேரியில் இயற்கை விவசாயக் கண்காட்சி வியாழக்கிழமை தொடங்கியது.

சீர்காழி இயற்கை விவசாயிகள் சங்கம், சென்னை துகில் நிறுவனம் சார்பில் இந்த கண்காட்சி புதுச்சரி எஸ்.எஸ்.திருமண மண்டபத்தில் தொடங்கியது.

நபார்டு வங்கி உதவிப் பொதுமேலாளர் எஸ்.ஸ்ரீபதி கல்குரா, கண்காட்சியை தொடங்கி வைத்தார்.

கைவினைப் பொருள்கள் உதவி இயக்குநர் என்.ராமமூர்த்தி, எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத் திட்ட இயக்குநர் வித்யாராம்குமார், நிரிவாகிகள் சுபாஷினி, செப்மியா, எம்.ராஜேந்திரன் உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர்.

கண்காட்சியில் இயற்கை விவசாயத்தின் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட பாரம்பரிய அரிசி வகைகள், இயற்கை சாயத்தின் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட கைத்தறி, காதி புடவைகள் உள்ளிட்ட பொருள்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன.

இக்கண்காட்சி வரும் 6-ம் தேதி வரை காலை 9.30 மணி முதல் இரவு 7.30 மணி வரை நடைபெறுகிறது.

### விவசாயத்துக்கு ரூ.2,859 கோடி வங்கி கடன் இலக்கு

கடலூர் மாவட்டத்தில் 2013-14-ம் ஆண்டுக்கான ஆண்டு கடன் திட்ட அறிக்கை வெளியிடப்பட்டது. வழக்கம்போல் இந்த ஆண்டும் விவசாயத்துக்கு கூடுதல் கடன் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடன் இலக்குபடி கடன் வழங்க வங்கிகள் முன்வரவேண்டும் என கடலூர் மாவட்ட விவசாயிகள் எதிர்பார்த்துள்ளனர்.

கடலூர் மாவட்ட வளர்ச்சிப் பணிகளுக்கு 2013-14-ம் ஆண்டுக்கான கடன் திட்டம் முன்னோடி வங்கியான இந்தியன் வங்கியால் தயாரிக்கப்பட்டது. ஊராட்சி ஒன்றிய அளவில் வங்கியாளர்கள்

கூட்டம் நடத்தி அந்தந்த வங்கி கிளைகள் கடன் திட்டம் தயாரித்து, பின் மாவட்ட அளவில் ஒன்று சேர்க்கப்பட்டு ரூ.3,722.33 கோடிக்கு மாவட்டக் கடன் திட்டம் தயாரிக்கப்பட்டது.

கடலூர் மாவட்ட ஆட்சியர் முகாம் அலுவலகத்தில் புதன்கிழமை மாலை நடைபெற்ற மாவட்ட அளவிலான வங்கியாளர்கள் கூட்டத்தில் ஆட்சியர் ரா.கிர்லோஷ்குமார் 2013-14-ம் ஆண்டுக்கான கடன் திட்டத்தை வெளியிட்டார். இதைத்தொடர்ந்து இந்தியன் வங்கி சார்பாக 29 மாணவர்களுக்கு ரூ.50.52 லட்சம் கல்விக் கடன்களை ஆட்சியர் வழங்கினார்.

இதுகுறித்து வங்கி அதிகாரிகள் கூறியது: இந்த கடன் திட்டம் தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி தயாரித்த 2013-14-ம் ஆண்டுக்கான மாவட்ட வளம் சார்ந்த கடன் திட்டத்தை சார்ந்து தயாரிக்கப்பட்டதாகும். இது கடந்த 2012-13-ம் ஆண்டு திட்டத்தைக் காட்டிலும் ரூ.657.57 கோடி அதிகம். இந்த திட்டத்தின் மூலம் 6.30 லட்சம் பேர் கடன் பெறுவர். இந்த திட்டத்தின்கீழ் அரசு நலத்திட்டங்களுக்கு ரூ.331 கோடி மானியம் இணைந்த கடன் திட்டமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த கடன் திட்டத்தில் விவசாயத்துக்காக ரூ.2,859.38 கோடி, தொழில் கடனுக்காக ரூ.144.18 கோடி, இதர முன்னுரிமைக் கடன்களுக்காக ரூ.718.77 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த கடன் திட்டம் வர்த்தக வங்கிகளுக்கு ரூ.2,957.15 கோடி, கூட்டுறவு வங்கிகளுக்கு ரூ.514.43 கோடி, பல்லவன் கிராம வங்கிக்கு ரூ.4.95 கோடி என பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. இது கடந்த 2012-13-ம் ஆண்டு திட்டத்தைக் காட்டிலும் 21.45 சதவீதம் கூடுதலாகும் எனத் தெரிவித்தனர்.

கடந்த ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட கடன் இலக்கு எட்டப்பட்டதா?

ஒவ்வொரு ஆண்டும் விவசாயத்துக்கு கூடுதலாக கடன் இலக்கு நிர்ணயிக்கப்பட்டாலும் விவசாயிகளுக்கு உரிய காலத்தில் கடன் கிடைப்பதில்லை. குறிப்பாக தனியார் வங்கிகள் விவசாயத்துக்கு கடன் கொடுப்பதையும், கல்விக்கடன் கொடுப்பதையும் முற்றிலுமாக நிறுத்திவிட்டன.இதைக் கண்காணிக்க வேண்டிய மாவட்ட முன்னோடி வங்கி, மாதந்தோறும் வங்கியாளர்களை அழைத்து பெயரளவில் மட்டுமே கூட்டதை நடத்திவிட்டு அரசுக்கு அறிக்கை அளித்துவிட்டு வேலை முடிந்தது என ஒதுங்கிகொள்கின்றன.

2013-2014-ம் நிதியாண்டில் வேளாண்மை மற்றும் கல்விக்கடன் இலக்கை அனைத்து வங்கிகளும் முழுமையாக வழங்குவதை மாவட்ட ஆட்சியர் உறுதி செய்யவேண்டும் என்றும், மேலும் கல்விக் கடன்களை ஆகஸ்ட் மாத இறுதிக்குள் வழங்க வேண்டும் என்றும் விவசாயிகள், மாணவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**5.04.2013 A.M**

---

## காய்கறி சாகுபடி ஏப்.,9ல் பயிற்சி

நாமக்கல்: "நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் வரும், 9ம் தேதி நிழல் வலையில் தாக்காளி, கொத்தமல்லி, புதினா மற்றும் கீரை சாகுபடி குறித்து இலவச பயிற்சி அளிக்கப்பட உள்ளது' என, அதன் ஒருங்கிணைப்பாளர் மோகன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கை:

நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் வரும், 9ம் தேதி நடக்கும் பயிற்சியில், நிழல் வலையில் கீரை, காய்கறி சாகுபடியின் முக்கியத்துவம், உர மேலாண்மை போன்ற பல்வேறு தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

பயிற்சியில் விவசாயிகள் உட்பட விருப்பமுள்ளோர் பங்கேற்கலாம். பயிற்சியில் பங்கேற்க விரும்புவோர், 04286 - 266244, 266345, 266650 ஆகிய தொலை பேசி எண்களில் தொடர்பு கொண்டோ அல்லது வேளாண் அறிவியல் நிலையத்திற்கு நேரடியாக வந்தும் பெயர் பதிவு செய்து கொள்ளலாம்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழகம், கேரளாவில் முட்டை விலை 275 காசாக நிர்ணயம்

நாமக்கல்: தமிழகம், கேரளாவில், முட்டை விலை, 275 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுளளது. பெரும் சரிவுக்கு பின், முட்டை விலை ஐந்து காசுகள் ஏற்றம் கண்டிருப்பது, கோழிப்பண்ணையாளர் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து, பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, 270 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, ஐந்து காசு உயர்ந்து, 275 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. முட்டை விலையில், ஒரு மாதத்துக்கு மேல் சரிவான சூழல் நிலவியது. இந்நிலையில், நேற்று, முட்டை விலை, ஐந்து காசுகள் ஏற்றம் கண்டிருப்பது கோழிப்பண்ணையாளர் மத்தியில் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நாட்டின் பிற மண்டலங்களில், முட்டை விலை (காசுகளில்) நிலவரம்:
சென்னை, 265, பெங்களூரு, 250, மைசூரு, 250, ஹைதராபாத், 225, மும்பை, 260, விஜயவாடா, 230, கோல்கத்தா, 290, பார்வாலா, 234, டில்லி, 250.
இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.
நாமக்கல்லில், நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டைக் கோழி விலை கிலோ, 46 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை, கிலோ, 62 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

## இடைப்பாடி பகுதியில் கடும் வறட்சி 2,000 தென்னை மரங்கள் கருகியது

இடைப்பாடி: இடைப்பாடி பகுதிகளில் ஏற்பட்டுள்ள கடுமையான வறட்சியால், விவசாய நிலங்களில் உள்ள இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் கருகியது. தமிழக அரசு, நிவாரண தொகை வழங்க வேண்டும் என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
சேலம் மாவட்டத்தில், தற்போது கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது. ஐந்து ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு, இந்தாண்டு அதிகபட்ச வெயில் வாட்டி வதைத்து வருகிறது. பருவமழை பொய்த்து போனதால், நிலத்தடி நீர்மட்டமும் வெகுவாக குறைந்துவிட்டது.
அதனால், இடைப்பாடி பகுதியில் உள்ள போர்வெல் பைப்புகளில், தண்ணீர் இல்லாமல், வறண்டு போனது. அதனால், கால்நடைகள் குடிப்பதற்கு கூட தண்ணீர் இல்லாததால், விவசாயிகள் சிரமப்பட்டு வருகின்றனர்.
இடைப்பாடி ஒன்றிய பகுதிகளில், ஆடையூர், பக்கநாடு, இருப்பாளி ஆகிய பகுதிகளில், 2,000க்கும் மேற்பட்ட ஏக்கர்களில், தென்னை மரங்கள் உள்ளன. பத்து ஆண்டுகளுக்கும் மேலாக இருந்த தென்னைமரங்கள், கடும் வறட்சி காரணமாக, தண்ணீர் இல்லாமல் மடிந்து வருகிறது. ஆடையூர், பக்கநாடு பகுதிகளில், இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட தென்னை மரங்கள், தற்போது கருகிவிட்டது.
பத்து ஆண்டுகளுக்கும் மேலாக பலன் தந்து வந்த தென்னை மரங்கள், அதிக அளவில் மடிந்து வருவதால், விவசாயிகள், தங்களது வாழ்வாதாரத்தை இழந்து வருகின்றனர். தமிழகத்தில், சென்னை மாவட்டத்தை தவிர, மற்ற மாவட்டங்கள் வறட்சி மாவட்டங்கள் என, தமிழக முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

இந்நிலையில், பக்கநாடு, ஆடையூர் பகுதிகளில் கருகி வரும் தென்னை மரங்கள் குறித்து ஆய்வு செய்து, உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## கம்பு, ராகி விலை திடீர் உயர்வு

சேலம்: தமிழகத்தில் சுட்டெரிக்கும் வெயிலின் தாக்கம் அதிகரித்து உள்ளதால், கம்பு, ராகி ஆகியவற்றின் விலை, நேற்று குவிண்டாலுக்கு, 300 ரூபாய் வரையிலும், கிலோவுக்கு, நான்கு ரூபாய் வரை விலை உயர்ந்துள்ளது.

தமிழகத்தில் வடகிழக்கு பருவ மழை குறைந்ததால், நீர் நிலைகள் வற்றியதோடு, கடும் வறட்சி காணப்படுகிறது. இதனால், அரசு சென்னையைத் தவிர, 31 மாவட்டங்களை, வறட்சி மாவட்டங்களாக அறிவித்து உள்ளது.

தமிழக நீர் நிலைகளில் குறைந்த அளவில் இருந்த தண்ணீரும், தற்போது அதிகரித்துள்ள வெயிலின் தாக்கம் காரணமாக சுருண்டு விட்டதால், நெற் பயிர் மட்டுமின்றி தோட்டக்கலை, மானாவாரி பயிர் விளைச்சலும் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால், தமிழகத்தில் விவசாய விளை பொருட்களின் விலை, உயர்ந்துள்ளது. குறிப்பாக கம்பு, ராகியின் விலை, நேற்று குவிண்டாலுக்கு, 300 ரூபாய் வரை, விலை உயர்வு ஏற்பட்டுள்ளது.

தமிழகத்தின் பெரிய மார்க்கெட்டுக்களாக கருதப்படும் விருதுநகர், சென்னை, சேலம் லீபஜார் ஆகியவற்றுக்கு விற்பனைக்கு வரும் ராகி, கம்பு ஆகியவற்றின் வரத்தில் கடும் சரிவு ஏற்பட்டுள்ளது. இந்த சரிவு காரணமாக தற்போது அவற்றின் விலை ஏறுமுகத்தில் உள்ளது.

கடந்த வாரம் வரை, கம்பு குவிண்டால், 2,100 ரூபாய்க்கு விற்றது, நேற்று, 2,400 ரூபாயாக உயர்ந்தது.

இதே போல், ராகி குவிண்டால், 2,700 ரூபாய்க்கு விற்றது, 3,000 ரூபாயாக உயர்ந்துள்ளது.

## மாம்பழங்கள் கெட்டுப் போகாமல் இருக்க வழிமுறைகள்

திருவள்ளூர் : அறுவடைக்குப் பின் மாம்பழங்கள் சேதம் அடையாமலும், கோடையில் கெட்டுப் போகாமலும் தடுப்பது எப்படி என, வேளாண் பல்கலைக்கழக பேராசிரியர்கள் ஆலோசனை வழங்கி உள்ளனர்.

மாங்காய்கள் உற்பத்திஆவதற்கு மூன்று ஆண்டுகள் தேவைப்படுகின்றன. ஆனால், அவை நன்கு முற்றிய உடன் விரைவில் பழுத்து உண்பதற்கு தயாராவதுடன், அதிக
அளவில் சேதாரங்களையும் ஏற்படுத்துகின்றன.

இதைத் தடுக்க, அறுவடைக்குப் பின் அவற்றை கையாளுவது மிக அவசியம்.

இதுகுறித்து, திருவூர் வேளாண் அறிவியல் மையத்தின் தலைவர் தேவநாதன், பேராசிரியர் முத்துராமலிங்கம் கூறியதாவது:

ஏப்ரல் மாதம் முதல், ஜூலை மாதம் வரை மா அறுவடை செய்யலாம். நட்ட முதல் மூன்று ஆண்டுகளில் வரும் பூக்களையும், காய்களையும் கிள்ளிவிட வேண்டும். நான்காம் ஆண்டிலிருந்து காய்களை அறுவடை செய்யலாம்.

நன்கு முற்றிய காய்களை விழாதவாறும், எந்தவித சேதாரம் ஏற்படாதவாறும் கவனமான அறுவடை செய்ய வேண்டும். வலை கட்டப்பட்ட திரட்டிகளைக் கொண்டு அறுவடை செய்தல் நல்லது.மாங்காய்களை கையாளுதல் அறுவடை செய்யப்பட்ட காய்களை குளிர்ச்சியான இடங்களில் வைக்க வேண்டும். சூரிய ஒளி, வெப்பமான இடங்களில் வைத்தல் கூடாது. இவ்வாறு செய்வதால், காய்களில் நடக்கும் வேதிவினை மாற்றங்கள் தூண்டப்பட்டு விரைவில் பழுத்துவிடும். அதிக வெப்பத்தினால், காய்கள் சுருங்கி விடுவதுடன், காய்களின் மேல்பகுதியில் வடுக்கள் ஏற்படும்.

தரம் பிரித்தல்

நோய் தாக்கிய காய்களை தனியே பிரிப்பதன் மூலம், மற்ற காய்களுக்கு நோய் பரவாமல் தடுக்கப்படும். நன்கு பழுத்த பழங்கள், பாதி பழுத்த பழங்கள் மற்றும் பழுக்காத பழங்களை தனித்தனியே பிரித்து வைக்க வேண்டும்.

ஏனெனில், இவற்றில் இருந்து வெளிவரும் எத்திலீன் வாயு, பழுக்காத பழங்களை விரைவில் பழுக்கச் செய்து விடும்.

காய்களின் காம்பிலிருந்து வெளிப்படும் பால், பழுத்தவுடன் கரும் புள்ளிகளை ஏற்படுத்தும். நோய் கிருமிகள் அந்த பகுதி வழியாக நுழைந்து, பழங்களை அழுக செய்து விடும். இவ்வகையான பழங்களை தனியே பிரித்து எடுத்துவிட வேண்டும்.

பழுக்க வைத்தல்

மாங்காய்கள் நன்கு பழுப்பதற்கு, 25 டிகிரி சென்டிகிரேடு வெப்பமும், 60 டிகிரி ஈரப்பதமும் வேண்டும். கால்சியம் கார்பைட் ரசாயனத்தை பயன்படுத்துதல் கூடாது. இவ்வாறு பழுக்கச் செய்வது சட்டப்படி குற்றமாகும். வெந்நீரில் மாங்காய்களை, 5 நிமிடம் அமிழ்த்தி எடுப்பதன் மூலம், பழங்கள் துரிதமாக பழுப்பதுடன், கெட்டுப் போகாமலும் பாதுகாக்கப்படுகின்றன.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## பச்சை பயறு விளைச்சலில் விவசாயிகளுக்கு இழப்பு : பனி, மழையால் 14 ஆயிரம் ஏக்கர் பாதிப்பு

பொன்னேரி : அதிக பனி மற்றும் மழையால், எதிர்பார்த்ததை விட பச்சை பயறு விளைச்சல் குறைவானதால், விவசாயிகளுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது. இதனால், உழைப்புக்கு ஏற்ற லாபம் இல்லாமல் போனது, அவர்களை வருத்தமடைய செய்து உள்ளது.

பயிரிடப்பட்ட 20 ஆயிரம் ஏக்கரில், 14 ஆயிரம் ஏக்கர் (70 சதவிகிதம்) பச்சை பயறு விளைச்சல் பாதிக்கப்பட்டு உள்ளது.

மீஞ்சூர் ஒன்றியம், வெள்ளகுளம், தேவராஞ்சேரி, ஏருசிவன், மடிமைகண்டிகை, கம்மார்பாளையம், அரசூர், பெரும்பேடு உள்ளிட்ட, 200 கிராமங்களில், விவசாயமே பிரதான தொழிலாக உள்ளது. ஆண்டிற்கு சம்பா, குறுவை என, இரு முறை நெல் பயிரிடப்படுகிறது. மேலும், கரும்பு, சவுக்கு உள்ளிட்ட நீண்டகால பயிர்களில் விவசாயிகள் ஈடுபடுகின்றனர்.

சம்பா பருவத்திற்கு பின்னர், விவசாயிகள் தங்களது விளை நிலங்களில், பச்சை பயறு பயிரிடுகின்றனர். இதில் சிறிய பயறு, சம்பா அறுவடைக்கு சில தினங்களுக்கு முன்னர் ஊடு பயிராக விதைக்கப்படுகிறது.

நெல் அறுவடை முடிந்து, இரண்டு மாத காலத்திற்கு பின்னர், ஊடுபயிரான பச்சை பயறு செடிகள் அறுவடை செய்யப்படும்.

அதேபோல் பெரிய பச்சை பயறு, சம்பா அறுவடைக்கு பின்னர், விளை நிலங்களை உழுது அதில் நேரிடையாக விதைக்கப்படுகிறது.

இதை பயிரிட ஒரு ஏக்கருக்கு, 8 கிலோ விதை பயறு தேவைப்படுகிறது. விதை பயறு, உழவுக்கூலி, பூச்சி மருந்து என, ஏக்கருக்கு, 4,500 முதல், 5,000 ரூபாய் வரை செலவாகும்.

நல்ல லாபம்

பருவ காலம் முடிந்தவுடன், கூலியாட்களை வைத்து நன்கு வளர்ந்த செடிகளை பிடுங்கி, அவற்றை, டிராக்டர்கள் மூலம், அடித்து சருகுகளில் இருந்து பச்சை பயறு பிரித்து எடுக்கப்படுகிறது. ஒரு ஏக்கருக்கு, 5 முதல், 7 மூட்டை வரை மகசூல் கிடைக்கும்.

விலையும், 100 கிலோ கொண்ட ஒரு மூட்டைக்கு, 3.500 ரூபாய் முதல், 4,000 ரூபாய் வரை கிடைக்கிறது. குறைந்த முதலீட்டில் அதிக லாபம் கிடைக்கும் என்பதால், பெரும்பாலான விவசாயிகள் பச்சை பயறை பயிரிடுவதில்
ஆர்வம் காட்டுகின்றனர்.

இந்நிலையில், மேற்கண்ட கிராமங்களில் சம்பா பருவத்திற்கு பின்னர், 20 ஆயிரம் ஏக்கர் விளை

நிலங்களில் பச்சை பயறு பயிரிடப்பட்டது. கடந்த ஜனவரி மாதத்தில், விதைத்து, இரண்டு மாத காலத்திற்கு பின்னர், தற்போது அவை அறுவடை செய்யப்பட்டு வருகிறது.

இதற்காக, கடந்த இரண்டு மாதங்களாக தொடர்ந்து, விவசாயிகள், அதற்கான பணிகளில் ஈடுபட்டு வந்தனர். அறுவடை செய்த விவசாயிகள், பச்சை பயறை பிரித்து எடுத்த விவசாயிகள், விளைச்சல் குறைவாக இருப்பதை கண்டு ஏமாற்றம் அடைந்து உள்ளனர். 14 ஆயிரம் ஏக்கர் அளவுக்கு பச்சை பயறு பாதிக்கப்பட்டு உள்ளது என, விவசாயிகள் தெரிவித்தனர்.

ஒரு ஏக்கருக்கு, 5 முதல், 7 மூட்டை கிடைக்கும் என, எதிர்பார்க்கப்பட்ட நிலையில், இரண்டு அல்லது மூன்று மூட்டைக்கும் குறைவாக கிடைக்கிறது. ஒரு சில இடங்களில் மட்டும் நான்கு மூட்டை வரை மகசூல் கிடைத்து உள்ளது.

உழவுப் பணி, பறிப்பு கூலி, டிராக்டர் கொண்டு செடிகளில் இருந்து பச்சை பயறை பிரிப்பது, சுத்தப்படுத்துவது, சென்னை தண்டையார்பேட்டையில் உள்ள விற்பனை மையத்திற்கு கொண்டு செல்வது என, ஏக்கருக்கு, 8,500 ரூபாய், வரை செலவு ஏற்படுகிறது.

வருத்தத்தில்...

கடந்த ஆண்டு ஒரு மூட்டை, 3,500 ரூபாய்க்கு விலை போன பச்சை பயறு, இந்த ஆண்டு, 1,300 ரூபாய் வரை கூடுதலாக விலை கிடைத்தும், விளைச்சல் குறைவால் விவசாயிகளுக்கு லாபம் இழப்பு ஏற்பட்டு உள்ளது.

இது குறித்து விவசாயி முருகன் கூறியதாவது:

ஒவ்வொரு ஆண்டும் சம்பா பருவத்தின்போது, மழை பெய்தோ, அல்லது மழை இல்லாமலோ நெற்பயிர்கள் நாசமாகி விவசாயிகளுக்கு நஷ்டத்தை ஏற்படுத்திவிடும். அதை ஈடுகட்ட பச்சை பயறு எங்களுக்கு லாபம் கிடைக்கும் விவசாயமாக இருந்து வருகிறது.

ஆனால், இந்த ஆண்டு எதிர்பார்த்ததை விட விளைச்சல் மிகவும் குறைவாக உள்ளது. இது எங்களுக்கு மிகுந்த வருவாய் இழப்பையும், ஏமாற்றத்தையும் அளித்து உள்ளது.

விதைத்த சில நாட்களிலேயே (ஜனவரியில்) அதிக மழை மற்றும் பனியால், விளைச்சல் குறைவு ஏற்பட்டு இருக்கலாம் என,

கருதுகிறோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

இது குறித்து, பெயர் வெளியிட விரும்பாத மீஞ்சூர் ஒன்றிய வேளாண் துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், "பச்சை பயறு விதைப்பிற்கு பிறகு, ஒரு முறை மழை பெய்ததில், விதைகள் வீணாகி,

விளைச்சல் குறைந்து போனது. பருவத்திற்கு பயிர் செய்தால் மட்டுமே சரியான விளைச்சலை பெற முடியும்,' என்றார்.

## கோழிப்பண்ணைக்கு மானியம் அறிவிப்பு

காஞ்சிபுரம் : ந ாே ட் டு க் ÷ க ாே ழி பண்ணை அமைக்க, ஆர்வம் உள்ளவர்கள், கால்நடை உதவி இயக்குனர்அலுவலகத்தில்விண்ணப்பிக்கலாம் என, கால்நடைஉதவி இயக்குனர் ராஜன்சிஆண்டனிதெரிவித்தார்.அவர் கூறியதாவது:காஞ்சிபுரம் மாவட்டத்தில், நான்கு கால்நடைகோட்டங்கள் உள்ளன.இக்கோட்டங்களில் நாட்டுக் கோழிகள் வளர்க்கும்திட்டம்செயல்படுத்தப்படுகிறது. நாட்டுக்கோழி பண்ணைகள்அமைக்கவிரும்பு வோர், மாவட்ட கால்நடைமருத்துவமனையில் உள்ள,உதவி இயக்குனரைஅணுகலாம்.பண்ணையாளர் ஒருவர்கொட்டகை அமைக்கவும், கோழிக் குஞ்சுகள்வாங்கவும், தீவனத்தொட்டி அமைக்க, தீவனம் வழங்க, 29,250ரூபாய்அரசு மானியம் வழங்கப்படுகிறது. இந்த வாய்ப்பைபயன்படுத்தி, பண்ணைவிவசாயிகள் பயன்அடையலாம்.இவ்வாறு அவர்தெரிவித்தார்.

## வறட்சியால் பதநீர் சுரப்பு குறைவு கருப்பட்டி உற்பத்தியும் பாதிப்பு

கோபிசெட்டிபாளையம்: கடும் வெயிலால் கோபி, நம்பியூர் பகுதியில் பனை வெல்லம் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.
ஈரோடு மாவட்டம் கோபி பகுதிக்கு உப்பட்ட அயலூர், மல்லியபாளையம், நரிக்குட்டை, அலையபாளையம், பாலபாளையம், கோசணம், சிறுவலூர், தாழ்குனி, கொளப்பலூர், கெட்டிசேவியூர் மற்றும் நம்பியூர் பகுதிகளில் அதிகளவில் பனை மரங்கள் உள்ளன.
பனை தொழிலை நம்பி ஆயிரக்கணக்கான குடும்பங்கள் உள்ளன. பதநீரை கொண்டு பனை வெல்லம் தயாரிக்கப்படுகிறது. பனையில் இருந்து சுவை மிக்க பதநீர் மட்டுமின்றி, நுங்கு, பனை கிழங்கு, பனங்கருப்பப்பட்டி, பனங்கற்கண்டு என பல சுவையான பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன.
கலப்படமற்ற மருத்துவ குணம் கொண்ட, மருந்தாக பனை வெல்லம் திகழ்கிறது. மருத்துவ குணம் கொண்ட, இதனை இயற்கை மருத்துவத்துக்கும் பயன்படுத்தப்படுகிறது. குளிர்ச்சி தன்மை கொண்டது. இன்றைக்கும் பெரும்பாலான கிராமங்களில் கருப்பட்டி காபிக்கு ஸ்பெஷலாக உபயோகித்து வருகின்றனர்.
பனையின் பாளைகளை நன்கு சீவி, பதப்படுத்தி, மண் கலயங்களை கட்டி, இரண்டு வேளையும் குறிப்பிட்ட அளவு சுண்ணாம்பு பூசப்படும். பனையில் இருந்து சுரக்கும் நீர், பதநீராக மாறுகிறது. சுண்ணாம்பு சத்து மிக்க இந்த பதநீர் குடிக்க மிகவும் சுவையானது.

மரத்தில் இருந்து சேகரிக்கப்படும் பதநீர், இரும்பு கொப்பரையில் ஊற்றி காய்ச்சப்படும். பாகுவடிவில் வந்ததும், அவற்றை அச்சில் ஊற்றப்பட்டு கருப்பட்டியாக தயாரிக்கப்படுகிறது. பனை மரங்கள் வறட்சியை தாங்கி வளரும் தன்மை கொண்டவை என்றாலு ம், ஓரளவு மழை பெய்தால்தான், மரம் நன்கு வளர்ந்து, அதிக பதநீர் சுரக்கும். நடப்பாண்டு பருவமழை பொய்த்து போனதால், பெரும்பாலான பனை மரங்கள் காய்ந்துள்ளது. பதநீர் உற்பத்தி குறைந்து விட்டது. கொளப்பலூர் சேர்ந்த பனை தொழிலாளி பழனிசாமி கூறியதாவது:

கடந்த, 30 ஆண்டுகளாக பனை தொழிலில் ஈடுபட்டு வருகிறேன். முன் எப்போதும் இல்லாத வகையில் நடப்பாண்டு, கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது. வறட்சிக்கு ஈடு கொடுக்க முடியாமல் கோபி, நம்பியூர் பகுதியில் ஆயிரக்கணக்கான பனை மரங்கள் காய்ந்து விட்டன.

ஒரு மரத்தில், ஐந்து முதல், ஏழு லிட்டர் பதநீர் கிடைத்தது. தற்போது வறட்சியால் அரை லிட்டர் பதநீர் மட்டுமே கிடைக்கிறது. 10 கிலோ கொண்ட கருப்பட்டி பெட்டி, 800 ரூபாய் முதல், 1,000 ரூபாய் வரை விற்கப்படுகிறது. வறட்சியால் பதநீரும், கருப்பட்டி உற்பத்தியும் குறைந்து, வே லை இழந்துள்ளோம், என்றார்.

## திண்டுக்கல் மார்க்கெட்டில் மல்லிகை பூ விலை சரிவு கிலோ ரூ. 60க்கு விற்றது

திண்டுக்கல் : திண்டுக்கல்லில் கடந்த வாரம் கிலோ ரூபாய் 400-க்கு விற்ற மல்லிகைப்பூ நேற்று கிலோ ரூபாய் 60க்கு விற்றது.

திண்டுக்கல் மாவட்டத்தில் செம்பட்டி, கொடைரோடு, சாணார்பட்டி, ஏ.வெள்ளோடு, நிலக்கோட்டை உட்பட பல இடங்களில் பூக்கள் பயிரிடப்படுகிறது. அறுவடை செய்யப்படும், பூக்கள் திண்டுக்கல் பூ மார்க்கெட்டிற்கு கொண்டு வரப்படுகிறது. இங்கிருந்து திருச்சி, தஞ்சாவூர், சென்னை உட்பட பல மாவட்டங்களுக்கு அனுப்பப்படுகிறது.

அதிகம்: இங்கு, கடந்த வாரம் மல்லிகை பூ கிலோ ரூபாய் 400க்கு விற்பனையானது. நேற்று விலையில் சரிவு ஏற்பட்டு கிலோ ரூபாய் 60க்கு விற்றது.

நேற்றைய விலை விபரம் (ஒரு கிலோ): மல்லிகை ரூ.60, கனகாம்பரம் ரூ.100, காக்கரட்டான் ரூ.40, வாடா மல்லி ரூ.20, சென்டு மல்லி ரூ.15, செவ்வந்தி ரூ.70, கோழிக்கொண்டை பூ ரூ.40, மரிக்கொழுந்து கட்டு ரூ.7, ரோஜா ரூ. 40, சம்பங்கி ரூ.100க்கு விற்கப்பட்டது.

வியாபாரி செந்தில் கூறுகையில்,""திண்டுக்கல் மாவட்டத்தில் பூ அறுவடை அதிகரித்துள்ளது. பங்குனி மாதம் என்பதால் முகூர்த்தம் இல்லை. இதனால் விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது. வியாபாரிகளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தினாலும், விவசாயிகளுக்கு வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது,'"என்றார்.

## மும்முனை மின்சாரமின்றி குறுவை சாகுபடி கேள்விக்குறி:சேத்தியாத்தோப்பு பகுதி விவசாயிகள் கவலை

சேத்தியாத்தோப்பு : மும்முனை மின்சாரம் வழங்காததால் குறுவை சாகுபடி கேள்விக்குறியாகி உள்ளது. இதனால் சேத்தியாத்தோப்பு பகுதி விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.
ஸ்ரீமுஷ்ணம் வருவாய் கோட்டத்திற்கு உட்பட்ட சேத்தியாத்தோப்பு அடுத்த குமாரக்குடி, நங்குடி, வட்டத்தூர், நந்தீஸ்வரமங்கலம், பேரூர், காவாலக்குடி, வலசைக்காடு, முடிகண்டநல்லூர், பழவராயநல்லூர், கூடலை யாத்தூர், வானூர், சோழதரம் உள்ளிட்ட 38 கிராமங்களை காவிரி டெல்டா பகுதியில் இருந்து நீக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.
இதனைக் கண்டித்து, பாதிக்கப்பட்ட விவசாயிகள் பல்வேறு தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வந்தனர். இதையடுத்து, காவிரி டெல்டா பகுதியில் இருந்து நீக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட கிராமங்கள் மீண்டும் அதில், சேர்க்கப்படும் என அதிகாரிகள் தரப்பில் உறுதியளிக்கப்பட்டது.
ஆனால், மூன்று மாதங்கள் கடந்த நிலையிலும், அதற்கான பணிகள் எதுவும் துவங்கவில்லை என விவசாயிகள் புலம்பி வருகின்றனர்.
மேலும், இப்பிரச்னையில் அதிகாரிகள் ஏற்படுத்திய குழப்பம் மற்றும் மின் தட்டுப்பாடு உள்ளிட்ட காரணங்களால் மேற்படி கிராமங்களில் கடந்த முறை சம்பா சாகுபடி செய்ய முடியாமல் போனது. இதுதவிர சம்பா குறுவை சாகுபடிக்கான இடைக்கால பருவத்தில் ஊடுபயிராக விளைவிக்கப்படும் உளுந்து பயிர் விவசாயமும் விவசாயிகளை பெருத்த நஷ்டத்திற்கும், ஏமாற்றத்திற்கும் ஆளாக்கியது.
தற்போது, குறுவை சாகுபடி துவங்க உள்ள நிலையில், இந்த கிராமங்களில் மூன்று மணி நேரம் மட்டுமே மும்முனை மின்சாரம் வழங்கப்படுகிறது. காவிரி டெல்டா பகுதிகளில் 12 மணி நேரம் விவசாயத்திற்கு மும்முனை வழங்குவதை போன்று, வழங்கினால் தான் குறுவை சாகுபடி சிறப்பான முறையில் நடக்கும்.
இல்லையேல் சம்பா சாகுபடி போன்று குறுவை சாகுபடியையும் விவசாயிகள் கைவிட வேண்டிய நிலைக்கு தள்ளப் படுவார்கள். இந்நிலையில், எதை நம்பி குறுவைக்கு நடவு பணி துவக்குவது, அரசும், அதிகாரிகளும் குறுவை நெல் சாகுபடிக்கு எத்தகை நடவடிக்கை எடுப்பார்கள், குறுவை சாகுபடி செய்ய முடியுமா என்ற கவலையில் விவசாயிகள் உள்ளனர்.
எனவே, மும்முனை மின்சாரம் வழங்கி குறுவை சாகுபடி நடக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே விவசாயிகளின் மிகுந்த எதிர்பார்ப்பாக உள்ளது.

## காலிங்கராயன் அணைக்கட்டில் கழிவு நீர்... நடவடிக்கைக்கு பாசன விவசாயிகள் கோரிக்கை

ஈரோடு: காலிங்கராயன் அணைக்கட்டில் இருந்து வரும் சாயக்கழிவுநீர் வாய்க்கால் அணைக்கட்டில் தேக்கம் அடைந்துள்ளதால், கடும் துர்நாற்றம் வீசுகிறது.
பவானி ஆற்றில், பவானி அருகே காலிங்கராயன்பாளையம் தடுப்பணையில் இருந்து உருவாகும் காலிங்கராயன் வாய்க்கால், கரூர் மாவட்டம் நொய்யல் ஆற்றில் இணைந்து, காவிரியில்

கலக்கிறது. 56 மைல் தூரமுள்ள இந்த வாய்க்கால் மூலம், 15,743 ஏக்கர் விளை நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.

ஒவ்வொரு ஆண்டும் பொதுப்பணித்துறை மூலம் காலிங்கராயன் வாய்க்காலில், ஜூலை, 16 முதல், 320 நாள் வரை பாசனத்துக்கு நீர் திறந்து விடுகின்றனர். சென்றாண்டு பருவமழை பொய்த்து அணையில், நீர் மட்டம் குறைந்து விட்டதால், இரண்டு மாதத்துக்கு முன்னதாகவே தண்ணீர் நிறுத்தப்பட்டது.

தற்போது, காலிங்கராயன் வாய்க்காலில், 50 கோடி ரூபாய் மதிப்பீல் சிமென்ட் கரை அமைத்தல் மற்றும் மராமரத்துப்பணிகள் பொதுப்பணித்துறை மேற்கொண்டு வருகின்றன. இந்நிலையில், பவானி ஆறு வழியாக வரும் சாயக்கழிவு நீர், காலிங்கராயன் வாய்க்கால் அணைக்கட்டில் தேக்கம் அடைந்துள்ளது.

இதனால், அப்பகுதியில் கடும் துர்நாற்றம் வீசுவதுடன், நிலத்தடி நீர் பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. எனவே, அதிகாரிகள் தலையிட்டு, இதற்கான சாயக்கழிவு நீரை தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும், என காலிங்கராயன் வாய்க்கால் பாசன விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது குறித்து பொதுப்பணித்துறை அதிகாரி கூறியதாவது: பவானி அற்றில் வரும் நீரை, தடுப்பணை மூலம், காலிங்கராயன் வாய்க்காலில் விடுப்படுகிறது. தற்போது, அணையில் நீர் குறைந்ததாலும், வாய்க்கால் விரிவாக்கப்பணிகள் மேற்கொள்வதாலும், இரண்டு மாதத்துக்கு முன்பே தண்ணீர் நிறுத்தப்பட்டது.

கோபி - பவானி ஆறு கரையோரத்தில் இருக்கும் சாய ஆலைகளில் இருந்து கடந்த சில நாட்களாக கழிவுநீர் வெளியேற்றுகின்றனர். இதனால், பவானி ஆறு வழியாக வரும் தண்ணீர் நீலம், பச்சை நிறமாக மாறி, தடுப்பணையில் இருந்து காலிங்கராயன் வாய்க்கால் அணைக்கட்டில் தேங்கி, துர்நாற்றம் வீசுகிறது.

இவ்விடத்துக்கு அருகே பொதுப்பணித்துறை அலுவலகம் செயல்படுகிறது. தற்போது வாட்டி வதைக்கும் வெயிலால், தண்ணீர் உறிஞ்சப்பட்டும், ஆவியாகிப்போவதால், அதிக துர்நாற்றம் வீசுவதால், தொடர்ந்து பணியாற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, எந்தெந்த பகுதியில் இருந்து அதிகமாக சாயக்கழிவு நீர் வருகிறது என்பதை ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க மாவட்ட நிர்வாகம் மற்றும் மாசு கட்டுப்பாட்டு வாரிய அதிகாரியிடம் முறையிடுகிறோம்.

தற்போது, 50 கோடியில் நடக்கும் சிமென்ட் மூலம் கரை அமைத்து முடியும்போது, இதுபோன்ற பிரச்னைகளுக்கு இடம் இருக்காது.

காலிங்கராயன் மட்டுமின்றி காவிரியில் பல இடங்களிலும் இதுபோன்று சாயக்கழிவு தேங்கி உள்ளது, என்றார்.

## கொளத்தூர் மலையடிவாரத்தில் வறட்சி வாழை, பப்பாளி கருகியதால் விரக்தி

மேட்டூர்: கொளத்தூர் மலையடிவார கிராமங்களில் சாகுபடி செய்த வாழை, பப்பாளி, தென்னை உள்ளிட்ட பயிர்கள், வறட்சி காரணமாக கருகியதால், விவசாயிகள் விரக்தியில் உள்ளனர்.
மேட்டூர் தாலுகா, கொளத்தூர் மலையடிவாரத்தில் ஏழரைமத்திக்காடு, தார்க்காடு, குரும்பனூர் உள்பட ஏராளமான கிராமங்கள் உள்ளது. கிராம மக்களில் பெரும்பாலோர் விவசாயத்தை நம்பியே உள்ளனர். கடந்த ஆண்டு விவசாயிகள் வாழை, பப்பாளி உள்ளிட்ட பயிர்களை சாகுபடி செய்தனர்.
வாழை முதிர்ச்சியடையும் சமயத்தில் பருவமழை பொய்த்ததாலும், கடும் வறட்சியால் நிலத்தடி நீர் குறைந்ததாலும், வாழை தார்கள் மரத்திலேயே கருகி விட்டது. அப்பகுதியில் சாகுபடி செய்த ரெட்லேடி ரக பப்பாளி மரங்களும் தண்ணீர் பற்றாக்குறையால் கருகி பரிதாபமாக காட்யளிக்கிறது.
ஏழரை மத்திக்காடு கிராமத்தில் ஐந்தாண்டுக்கு முன், சாகுபடி செய்த தென்னை மரங்களும் கூட வறட்சியால் கருக ஆரம்பித்துள்ளது. வாழை, பப்பாளி, பருத்தி உள்பட பல்வேறு பயிர்கள் வறட்சியால் கருகியதால் பல லட்சம் ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது விவசாயிகளை விரக்தியில் ஆழ்த்தியுள்ளது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

5.04.2013 A.M

---

## குரங்கு தொல்லையால் ஜம்முவில் ரூ.38 கோடிக்கு விவசாய உற்பத்தி பாதிப்பு



ஜம்மு : ஜம்முவில் குரங்குகள் சேதப்படுத்துவதால், ஆண்டுக்கு ரூ.38 கோடி மதிப்பிலான விவசாய உற்பத்தி பாதிப்பு ஏற்படுகிறது என காஷ்மீர் சட்டசபையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜம்முவில் குரங்குகள் தொல்லையால், விவசாய உற்பத்தியில் ஆண்டுக்கு எவ்வளவு பாதிப்பு ஏற்படுகிறது என்ற விவரம் குறித்து மாநில வேளாண்துறை அமைச்சர் மிர் சட்டசபையில் நேற்று கூறியதாவது:

ஜம்மு பகுதியில் உள்ள 250 கிராமங்களில் சோளம், கோதுமை, அரசி மற்றும் காய்கறிகள் 15 ஆயிரத்து 596 ஹெக்டேரில் ஒவ்வொரு ஆண்டும் பயிரிடப்படுகின்றன. மா, கொய்யா, பேரிக்காய், திராட்சை, லிச்சி, பிளம்ஸ், ஆப்ரிகாட் உள்ளிட்ட பழங்கள் 68 ஆயிரத்து 384 ஹெக்டேர் நிலத்தில் பயிரிடப்படுகின்றன. இங்கு குரங்குகள் அதிகளவில் இருப்பதால், விவசாய உற்பத்தியில் பெரும் பாதிப்பு ஏற்படுகிறது. பயிர்கள் சேதமடைவதால் ஆண்டுக்கு ரூ.33 கோடி இழப்பும், 9 ஆயிரத்து 426 மெட்ரிக் டன் பழங்கள் சேதமடைவதால் ரூ.4 கோடியே 72 லட்சம் இழப்பும் ஏற்படுகிறது. ஆனால் காஷ்மீர் பகுதியில் குரங்குகள் தொல்லை அவ்வளவாக இல்லை. இவ்வாறு அவர் கூறினார்.

## வறட்சியால் சாகுபடி பரப்பு குறைவு வெயிலில் கருகுவதை தவிர்க்க கோரைப்புல் அறுவடை தீவிரம்



கரூர் : கரூர் ஒன்றிய பகுதிகளில் உள்ள கிராமங்களில் கோரைப்புல் அதிகளவில் பயிரிடப்படுகிறது. பாய் தயாரிப்பதற்கான மூலப்பொருளான கோரையை பதப்படுத்தி விற்பனை செய்கின்றனர். பாய் தயாரிப்பாளர்கள், முகவர்கள் மூலமாக இந்த கோரையை வாங்கிச் செல்கின்றனர். கரூர் அருகே உள்ள வாங்கல் செவ்வந்திபாளையம் பகுதியில் துவங்கி, இரட்டை மரத்தான் கோயில் வரை கோரை சாகுபடி செய்கின்றனர். கடம்பங்குறிச்சி வாங்கல் போன்ற பகுதிகளிலும் அதிக அளவில் கோரை சாகுபடி செய்யப்பட்டது.

பருவ மழை பொய்த்ததால் கோரை சாகுபடி செய்யும் பரப்பளவு குறைந்துவிட்டது. 200 ஏக்கரில் முன்னர் நடைபெற்று வந்த கோரை சாகுபடி பரப்பளவு, காலப்போக்கில் வெகுவாக குறைந்துவிட்டது. தொடர்ந்து மழை பொய்த்த நிலையும், காவிரியில் தண்ணீர் வராத நிலையும் ஏற்பட்டதால், விவசாயிகள் கோரை சாகுபடி செய்வதில் ஆர்வம் செலுத்தவில்லை.

அங்கொன்றும் இங்கொன்றுமாக சுமார் 30 ஏக்கர் அளவுக்கே கோரை பயிரிடப்பட்டிருக்கிறது. தற்போது கடுமையான வறட்சி நிலவி வருகிறது. வெயில் சீசன் தொடங்கி கரூர் மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக 100 டிகிரிக்கு மேல் கொளுத்துவதால் கோரை புற்கள் கருகும் நிலை ஏற்பட்டுள்ளது. கோரை சாகுபடி செய்த விவசாயிகள், அவை கருகும் முன் அறுவடை செய்யும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். செவ்வந்தி பாளையம் பகுதியில் நேற்று தொழிலாளர்கள் அறுவடை பணியில் ஈடுபட்டனர்.

## குமரி கடல் பகுதியில் காற்று சுழற்சி தென் மாவட்டத்தில் மழை பெய்யும்



சென்னை : குமரிக் கடல் பகுதியில் வளி மண்டல மேல் அடுக்கில் காற்று சுழற்சி ஏற்பட்டுள்ளது. இதனால் இன்று தென் தமிழகத்தில் மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. அதிகரித்து வரும் வெயில் காரணமாக ஏற்பட்ட வெப்ப சலனத்தால் வளி மண்டல மேல் அடுக்கில் காற்று சுழற்சி உருவாகியுள்ளது. இது குமரிக்கடல் பகுதியை தொடர்ந்து கன்னியாகுமரி, மன்னார் வளைகுடா உள்ளிட்ட பகுதிகளில் பரவியுள்ளது.

இதன் காரணமாக இன்று தென் மாவட்டங்களில் மழை பெய்யும். வட தமிழகத்தில் பல இடங்களில் வெயிலின் தாக்கம் கடுமையாக இருந்தது. கரூர்பரமத்தியில் நேற்று அதிகபட்சமாக 106 டிகிரி வரை வெயில் கொளுத்தியது. திருச்சி, வேலூரில் 104 டிகிரி வெயில் நிலவியது.

## காபி ஏற்றுமதி 10% சரிவு டீ ஏற்றுமதி 9% உயர்வு



புதுடெல்லி : இந்தியாவின் காபி ஏற்றுமதி 2012,13ம் ஆண்டில் 10 சதவீதம் சரிந்து, 3 லட்சத்து 10,612 டன்னாக உள்ளது. இது முந்தைய ஆண்டில் 3 லட்சத்து 44,356 டன்னாக இருந்தது.

ரூபாய் மதிப்பில் 2012,13ம் ஆண்டில் 4,737 கோடிக்கு காபி ஏற்றுமதியானது. அது 2011,12ம் ஆண்டில் ரூ.4,836 கோடியாக இருந்தது. சர்வதேச அளவில் விலை வீழ்ச்சி காரணமாக ஏற்றுமதி குறைந்தது.

அதே சமயம், டீத்தூள் ஏற்றுமதி 2012,13ம் ஆண்டில் 9 சதவீதம் அதிகரித்துள்ளது. இந்த ஆண்டில் 22 கோடி கிலோ டீத்தூள் ஏற்றுமதியாகி உள்ளது.
அதுவே முந்தைய ஆண்டில் 20 கோடி கிலோ டீத்தூளே ஏற்றுமதியாகி இருந்தது.

## காரைக்கால் விவசாயிகளுக்கு நிவாரணத்துடன் பயிர் காப்பீட்டு தொகை வழங்காதது ஏமாற்றம்

காரைக்கால், : காரைக்கால் விவசாயிகளுக்கு நிவாரணத்துடன், பயிர் காப்பீட்டுத்தொகையை வழங்காதது ஏமாற்றம் அளிக்கிறது என்று மார்க்சிய கம்யூனிஸ்டு கூறியுள்ளது.
இது குறித்து, மாவட்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் வின்சென்ட் கூறியதாவது:

காரைக்கால் மாவட்டத்திற்கான காவிரி நீர், மழை இல்லாத காரணத்தால் குறுவை, சம்பா மற்றும் தாளடி சாகுபடிகள் பொய்த்துபோனது. இந் நிலையில் ஒரு சில நாட்கள் பெய்த மழையில் நேரடி நெல் விதைத்த விவசாயிகள் தொடர்ந்து மழை பெய்யாத காரணத்தால், அரசின் அறிவிப்பை நம்பி பம்பு செட் மூலம் பயிர்களை காப்பாற்றினார்கள். ஆனால், அரசு அறிவித்த படி இதுநாள் வரை பம்புசெட்டுக்கான டீசல் மானியம் வழங்கப்படவில்லை.
இந்நிலையில், புதுச்சேரி அரசு காரைக்காலில் 4,749 ஹெக்டேர் பயிர்கள் பாதிக்கப்பட்டதாக உத்தேச கணக்கெடுத்து, ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.20 ஆயிரம் நிவாரணம் வழங்கப்படுமென அறிவித்துள்ளது. இந்த அறிவிப்பு மகிழ்ச்சி அளித்தாலும், தமிழகத்தை போல் நிவாரணத்துடன், பயிர் காப்பீட்டுத்தொகையை வழங்காதது ஏமாற்றத்தை அளிக்கிறது. எனவே, தமிழகத்தைபோல், பயிர் காப்பீட்டுத்தொகையுடன் நிவாரணத்தையும் வழங்க புதுச்சேரி அரசு முன்வரவேண்டும்.
மேலும், காரைக்கால் மாவட்ட வேளாண் அதி காரிகளின் உத்தேச கணக்கெடுப்பின்படி நிவாரணம் வழங்காமல், உண்மையாக பாதிக்கப்பட்ட விவசாயிகளை கண்டறிந்து நிவாரணம் வழங்கவேண்டும். அதையும், ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.25 ஆயிரம் வழங்கவேண்டும். விவசாய தொழிலாளர்கலுக்கு ரூ.10 ஆயிரம் வழங்கவேண்டும். விவசாயிகளின் கூட்டு றவு கடன்களை ரத்து செய்யவேண்டும். கால் நடைகளுக்கு உரிய தீவனம் வழங்கவேண்டும். எதிர்காலத்தில்

காரைக்காலில் தண்ணீரை சேமித்து வைக்க ஏரி, குளம் போன்றவற்றை தொலை நோக்கு பார்வையோடு வெட்ட முன்வரவேண்டும் என்றார்.

## கம்பபத்தில் நெல் விவசாயம் பாதிப்பு மேய்ச்சலுக்கு வந்த வாத்துகள் ஏமாற்றம்

கம்பம், : கம்பம் பகுதியில் பருவமழை இல்லாமல் கடும் வறட்சி ஏற்பட்டுள்ளதால் நெல் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் மேய்ச்சலுக்கு வந்த வாத்துகள் ஏமாற்றமடைந்துள்ளன.

கம்பம், காமயகவுண்டன்பட்டி, நாராயணத்தேவன்பட்டி, சுருளிப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் ஆண்டுதோறும் இரண்டு போக நெல் அறுவடை பணி நடைபெற்று வருகிறது. நெல் அறுவடை பணி நடக்கும் போது மதுரை, சோழவந்தான் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வாத்துகளை இங்கு கொண்டு வருகின்றனர். அவைகளை அறுவடை செய்யப்பட்ட வயல்களில் மேய்ச்சலுக்காக விடப்பட்டு, அதன் முட்டைகளை கேரளாவிற்கு விற்பனை செய்து வருகின்றனர்.

வயல்வெளிகளில் உள்ள நண்டுகள், புழு, பூச்சிகள், மற்றும் உதிர்ந்து கிடக்கும் நெல்மணிகளை வாத்துகள் உணவாக கொள்கின்றன. இப்பகுதியில் இருந்து தினந்தோறும் சுமார் ஆயிரத்து 500 முட்டைகள் வரை கேரளா மாநிலத்தில் இருந்து மொத்த வியாபாரிகள் வந்து வாங்கி செல்கின்றனர். ஒரு முட்டை ரூபாய் 6 வீதம் கொள்முதல் செய்கின்றனர்.

இப்பகுதிகளில் கடந்த சில ஆண்டாகவே பருவமழை இல்லாமல் கடும் வறட்சி நிலவி வருகிறது. பாசனத்திற்கு போதிய தண்ணீர் வசதி இல்லாமல் பல இடங்களில் இரண்டாம் போக நெல் நடவுப்பணி மேற்கொள்ளப்படவில்லை. விவசாயிகள் தங்கள் வயல் வெளிகளை தரிசாக வைத்துள்ளனர். ஆண்டுதோறும் கம்பம் பள்ளத்தாக்கு பகுதியை நம்பி வரும் வாத்து உரிமையாளர்கள், இந்தாண்டு தங்கள் கொண்டு வந்துள்ள வாத்துகளை மேய்ச்சலுக்கு விட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து சோழவந்தானை சேர்ந்த வீரப்புலி கூறுகையில், ‘ஆண்டுதோறும் இரண்டு போக அறுவடை சமயத்தில் கம்பம் பள்ளத்தாக்கு பகுதிக்கு வாத்துகளை மேய்ச்சலுக்கு கொண்டு வருவோம். எந்த ஆண்டுமே இல்லாத அளவிற்கு இந்தாண்டு கடும் வறட்சி ஏற்பட்டு வயல்கள் தரிசாக கிடக்கின்றன. இதனால் வாத்துக்களை மேய்க்க வழியில்லை. மேலும் முட்டை உற்பத்தியும் குறைந்து விட்டது’ என்றார்.

படவிளக்கம்: 3 யுபிஎம் 01:

கம்பம் பகுதியில் மேய்ச்சலுக்காக வந்த வாத்துகள் வாய்க்காலில் உணவுகளை தேடிக்கொண்டிருக்கின்றன.

### மல்லிகை பூ வரத்து அதிகரிப்பு கம்பத்தில் விலை கடும் வீழ்ச்சி

கம்பம், : கம்பம் பகுதிக்கு மல்லிகை பூ வரத்து அதிகரிப்பால் விலை கடும் வீழ்ச்சியடைந்துள்ளது. கம்பம் பழைய பஸ்ஸ்டாண்டில் பூக்கள் மொத்த வியாபார கடைகள் உள்ளது. இங்கு திண்டுக்கல், மதுரை, உசிலம்பட்டி, நிலக்கோட்டை, பல்லவராயன்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து தினமும் மல்லிகை பூ விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது. இங்கிருந்து சுற்றுப்புற கிராமங்களை சேர்ந்த சில்லரை பூ வியாபாரிகள் கிலோ கணக்கில் வாங்கிச்சென்று விற்பனை செய்கின்றனர். மேலும் அதிகளவு கேரளாவிற்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. கடந்த சில தினங்களாக மல்லிகை பூ வரத்து அதிகரிப்பால் விலை கடும் வீழ்ச்சி அடைந்துள்ளது.

இதுகுறித்து வியாபாரி சீனிவாசன் கூறுகையில், 'கடந்த 20 நாட்களுக்கு முன்பாக 1 டன்னுக்கு குறைவாகவே வரத்து இருந்தது. இதன் காரணமாக கிலோ ரூபாய் 350 வரை விற்பனை செய்யப்பட்டு வந்தது. தற்போது தினமும் 2 டன்களுக்கு மேல் வரத்து உள்ளதால் கிலோ ரூபாய் 60க்கு மட்டுமே விற்பனை செய்யப்பட்டு வருகிறது' என்றார்.

### கோடை வெயில் மண்டையை பிளக்குது வெள்ளரி விற்பனை வெளுத்து கட்டுது

சாத்தூர், : கோடை வெயிலின் தாக்கத்தால் வெள்ளரி விற்பனை தற்போது சூடுபிடித்துள்ளது. ஒவ்வொரு ஆண்டும் கோடைக் காலம் பிப்ரவரி மாதம் தொடங்கி, ஜூன் மாதம் நிறைவடையும். இந்த ஆண்டு பருவமழை பொய்த்துவிட்ட நிலையில், வெயிலின் தாக்கம் அதிக மாக உள்ளது. வெப்பத்தை தணிக்க மக்கள் கடைகளில் குளிர் பானங்களை வாங்கி பருகுகின்றனர். என்னதான் பல வண்ணங்களில் குளிர்பானங்கள் வந்தாலும், அதனை பருகினாலும், இயற்கை பானங்களுக்கு நிகராகாது.

இளநீர் பருகினால் நமது உடலுக்கு கிடைக்கும் புத்துணர்வையும், ஊட்டத்தையும் குளிர்பானங்கள் தந்துவிடாது. இதுதவிர பதனீர், தர்பூசணி, நுங்கு, வெள்ளரி பிஞ்சு, கரும்புச்சாறு ஆகியவையும் மக்களின் தாகத்தை தணிக்க பேருதவி புரிகின்றன. குறைந்த விலையில் அதிக நன்மைகளை அள்ளித்தரும் வெள்ளரி பிஞ்சுகளை விரும்பாதவர் இருக்க முடியாது. கோடையை முன்னிட்டு வெள்ளரி பிஞ்சு வியாபாரம் தற்போது சூடுபிடித்துள்ளது.

தமிழகத்தில் சாத்தூர், ஈரோடு, புதுக்கோட்டை, தர்மபுரி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் வெள்ளரி விளைச்சல் அதிகம் உள்ளது. இருந்தபோதும் சாத்தூர் வெள்ளரி பிஞ்சுக்கென தனி

மவுசு உண்டு. சாத்தூர் பகுதியில் வன்னிமடை, போத்திரெட்டிபட்டி, நீராவிபட்டி, பெரியகொல்லபட்டி உட்பட 20 கிராமங்களில் சுமார் 500 ஏக்கர் பரப்பில் வெள்ளரி விளைச்சல் நடைபெறுகிறது. மற்ற பகுதிகளில் கோடை காலத்தை ஒட்டியே வெள்ளரி பயிரிடப்படும். சாத்தூரில் ஆண்டு முழுவதும் வெள்ளரி விளைச்சல் நடைபெறும். இப்பகுதியில் விளையும் வெள்ளரிப்பிஞ்சுகள் கோவை, நாகர்கோவில், நெல்லை, தூத்துக்குடி உள்ளிட்ட மாநிலத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகின்றன.

விவசாயிகளிடம் 100 எண்ணம் கொண்ட வெள்ளரிக்காய்களை வியாபாரிகள் ரூ.80 முதல் 100 ரூபாய்க்கு வாங் குகின்ற னர். விற் பனைக்கு வரும்போது தரத்திற் கேற்ப 5 முதல் 7 எண்ணம் கொண்ட வெள்ளரிக்காய் 10 ரூபாய்க்கு தரப்படுகின்றன. பஸ் நிறுத்தம், பஸ் ஸ்டாண்டு பகு தியில் தற்போது வெள்ளரி விற் பனை படுஜோ ராக நடக்கிறது. வெயிலால் ஏற்படும் நா வறட்சியை தவிர்க்க மக்கள் வெள்ளரி பிஞ்சு களை விரும்பி வாங்கி சாப்பிடுகின் றனர்.

வியாபாரி கார்த்திக் குமார் கூறுகையில், `பருவமழை பொய்த்துவிட்டதால் வெள்ளரிப்பிஞ்சு விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு 10 எண்ணம் கொண்ட வெள்ளரிப்பிஞ்சுகளை, 10 ரூபாய்க்கு விற்பனை செய்தோம். இந்த ஆண்டு 5 முதல் 7 எண்ணம் கொண்ட வெள்ளரிப்பிஞ்சுகளை 10 ரூபாய்க்கு விற்பனை செய்து வருகின்றோம் என்றார்.

பார்களில் ‘சைடிஷ்

மதுக்கடை பார்களில் `சைடிஷ் தேவைக்கு சேவு, சீவல், கடலைமிட்டாய், மீன் வறுவல், சிக்கன் விற்பனை நடப்பது வழக்கம். இதில் வெள்ளரி பிஞ்சு விற்பனையும் முக்கியத்துவம் பெற்றுள்ளது. நீர்சத்து அதிகம் இருப்பதால் வெள்ளரி பிஞ்சுகளை `குடிமகன்கள் விரும்பி சாப்பிடுகின்றனர். பார்களில் வெள்ளரி பிஞ்சுகள் இருமடங்கு அதிக விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

## அரிசி ஆலை அதிபர்களுக்கு உணவு பதப்படுத்தும் விழிப்புணர்வு கூட்டம்

திருச்சி, : அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு உணவுப் பதப்படுத்தும் இயக்க விழிப்புணர்வு கூட்டம் நடத்தப்பட்டது.

திருச்சி வேளாண் விற்பனை, வேளாண் வணிகத் துறை சார்பில் உணவுப் பதப்படுத்தும் இயக்கத்தின் 2012-13 திட்ட விழிப்புணர்வு கூட்டம் திருச்சி மாவட்ட அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்க கட்டிடத்தில் நடந்தது. மாவட்ட வேளாண்மை வணிக துணை இயக்குநர்

சண்முகம் தலைமை வகித்தார். மாவட்ட அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்க தலைவர் சின்னச்சாமி மற்றும் நிர்வாகிகள் பங்கேற்றனர்.

உணவுப் பதப்படுத்தும் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிதியுதவி உள்ளிட்ட விபரங்களை வேளாண் அலுவலர்கள் ராபர்ட் ரிச்சர்டு, சாக்ட்ரடீஸ், ரவீந்திரன் ஆகியோர் விளக்கினர். மாவட்ட தொழில் மைய மேலாளர் ரவீந்திரன் சிறப்புரையாற்றினார். வேளாண் அலுவலர் ஷாஜகான் வரவேற்றார். உதவி வேளாண் அலுவலர் ஜீவானந்தம் நன்றி கூறினார். ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர்கள் திருப்பதி, ஆனந்த், தொட்டப்பன், ராதாகிருஷ்ணன், சரவணக்குமார், ஜெயக்குமார் ஆகியோர் செய்திருந்தனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

5.04.2013 A.M

---

## காவேரிப்பட்டணத்தில் பலத்த காற்றுடன் ஆலங்கட்டி மழை பொதுமக்கள் மகிழ்ச்சி

காவேரிப்பட்டணம்

காவேரிப்பட்டணத்தில் நேற்று பலத்த காற்றுடன் ஆலங்கட்டி மழை பெய் தது. இதனால் பொது மக்கள் மகிழ்ச்சியடைந் தனர்.

**சுட்டெரிக்கும் வெயில்**

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கோடை வெயில் வழக்கத்தை காட்டிலும் இந்த ஆண்டு அதிகமாக உள்ளது. ஏப்ரல் மாத தொடக்கத்திலிருந்து அனல் பறக்கும் வெயில் இந்த ஆண்டு கடந்த பிப்ரவரி மாத கடைசியிலிருந்தே கொளுத்தி எடுக்கிறது.

இதனால் பெரும்பாலான ஏரிகள், குளங்கள் வறண்டுவிட் டன. சில இடங்களில் நிலத்தடி நீரும் அதாள பாதாளத்துக்கு சென்றுவிட்டது. இதில் சில பகுதிகளில் குடிநீர் தட்டுப் பாடு ஏற்பட்டுள்ளது. காலை 8 மணிக்கெல்லாம் வெப் பத்தை உமிழும் வெயிலின் உக்கிரம் மாலை 5 மணி வரை நீடிக்கிறது. இதனால் பகலில் வெயில் கொடுமை தாங்க முடியாமலும், இரவில் புழுக் கம் தாங்க முடியாமலும் மக் கள் அவதிப்பட்டு வருகிறார் கள்.

வெயிலின் இந்த கோர தாண்டவத்தால் வனப்பகுதி யில் உள்ள நீர்நிலைகள் வறண்டு அங்குள்ள விலங் கினங்கள் இரைக்காகவும், தண்ணீருக்காகவும் குடி யிருப்பை நோக்கி வரத் தொடங்கியுள்ளன. சில உயிரி னங்கள் வெயிலின் கொடுமை தாங்காமல் இறக்கின்றன. இதனால் கோடை மழை பெய் யாதா? என அனைவரும் ஏங்கி வருகிறார்கள்.

**ஆலங்கட்டி மழை**

இந்தநிலையில் கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட் டணம் பகுதிகளில் நேற்று காலை முதல் மாலை வரை வெயில் கொளுத்தி எடுத்தது. பின்னர் மாலை 6 மணிக்கு வானில் கரு மேகங்கள் சூழ்ந்து பலத்த காற்றுடன் ஆலங்கட்டி மழை கொட்டத் தொடங் கியது. சுமார் 1 மணிநேரம் நீடித்த

இந்த மழையால் சாலையில் மழை நீர் பெருக் கெடுத்து ஓடியது. கடுமையான வெப்பம் தணிந்து சற்று குளுமை ஏற்பட்டது. இதனால் அப்பகுதி மக்கள் மகிழ்ச்சி யடைந்தனர்.

இதற்கிடையில் மழையுடன் பலத்த காற்றும் வீசியதால் சில இடங்களில் சாலைகளின் ஓரங்களில் வைக்கப்பட்டிருந்த விளம்பர தட்டிபோர்டுகள், பேனர்கள் சரிந்து விழுந்தது. சில இடங்களில் கூரை வீடுகள் மற்றும் மாட்டுக் கொட்டகை கள் சேதமடைந்தது. மின் கம்பிகள் அறுந்து விழுந்து மின்சாரம் தடைபட்டது.

## நாமக்கல்லில் ரூ.60 லட்சத்துக்கு பருத்தி ஏலம்

நாமக்கல்

நாமக்கல்லில் நேற்று நடைபெற்ற ஏலத்தில் 4 ஆயிரம் மூட்டை பருத்தி ரூ.60 லட்சத்துக்கு விற்பனையானது.

**பருத்தி ஏலம்**

நாமக்கல்  திருச்செங்கோடு ரோட்டில் உள்ள வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க வளாகத்தில் வியாழக்கிழமை தோறும் பருத்தி ஏலம் நடைபெற்று வருகிறது. வழக்கம்போல் நேற்று நடந்த ஏலத்துக்கு நாமக்கல், எருமப்பட்டி, சேந்த மங்கலம், பவித்திரம், நாமகிரிப் பேட்டை, ராசிபுரம் என மாவட்டம் முழுவதும் இருந் தும், அண்டை மாவட்டங் களில் இருந்தும் விவசாயிகள் ஏறத்தாழ 4 ஆயிரம் மூட்டை பருத்தியை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். மறைமுக ஏலம் மூலம் இந்த பருத்தி மூட்டைகள் விற்பனை செய்யப்பட்டன.

**60 லட்சத்துக்கு விற்பனை**

இதன்படி ஆர்.சி.எச். ரக பருத்தி குவிண்டால் ரூ.4 ஆயிரத்து 200 முதல் ரூ.4 ஆயிரத்து 750 வரைக்கும், டி.சி.எச். ரக பருத்தி ரூ.4 ஆயிரத்து 500 முதல் ரூ.5 ஆயிரத்து 100 வரையிலும், சுரபி ரக பருத்தி ரூ.4 ஆயிரத்து 800 முதல் ரூ.5 ஆயிரத்து 200 வரையிலும் ஏலம் போனது. இந்த பருத்தி மூட்டைகளை கோவை, அவினாசி, திருப்பூர், திருச்செங்கோடு, ஆத்தூர் பகுதிகளில் இருந்து வந்த வியாபாரிகள் ஏலம் எடுத்து சென்றனர். நேற்று ஏலத்துக்கு வந்த பருத்தி மூட்டைகள் ஏறத்தாழ ரூ.60 லட்சத்துக்கு ஏலம் போனதாக கூட்டுறவு சங்க அதிகாரிகள் தெரி வித்தனர்.

வழக்கமாக ஏலத்தில் எடுக்கும் பருத்தி மூட்டைகள் வியாபாரிகள் உடனுக்குடன் லாரிகளில் எடுத்து சென்று விடுவார்கள். ஆனால் கடந்த வாரம் ஏலம் விடப்பட்ட ஏராளமான மூட்டைகள் களத்திலேயே வைக்கப்பட்டு இருந்தன.

## காஞ்சீபுரம் மாவட்டத்தில் பயறு சாகுபடியில் அதிக மகசூல் பெற விதை பரிசோதனை செய்து கொள்ளலாம் அதிகாரி தகவல்

காஞ்சீபுரம்,

காஞ்சீபுரம் மாவட்டத்தில் பயறு சாகுபடியில் அதிக மகசூல் பெற விதை பரிசோதனை செய்து கொள்ளலாம் என்று அதிகாரி பெருமாள் தெரிவித்துள்ளார்.

பயறு சாகுபடி

காஞ்சீபுரம் விதை பரிசோதனை அதிகாரிć பெருமாள் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-
காஞ்சீபுரம் மாவட்டத்தில் சித்திரை பட்டத்தில் கோடை பயிர்களாக .உளுந்து, பச்சை பயறு, காராமணி போன்றவற்றை சாகுபடி செய்வது வழக்கம். நீர் பற்றாக்குறை உள்ள கோடை காலத்தில் குறைவாக நீர் தேவைப்படும் பயறு வகை பயிர்களை சாகுபடி செய்வதன் மூலம் அதிக வருமானம் பெறலாம்.

பயறு வகைப் பயிர்களை பொறுத்தவரையில் பயன்படுத்தப்படுćம் விதைகளுக்கு குறைந்தபட்சம் 75 சதவீதம் முளைப்புத் திறன் இருப்பது அவசியம்.
இந்த விதைகளை பயன்படுத்தும் போது உளுந்து, பச்சைப்பயறு போன்ற பயிர்களுக்குரிய இடைவெளியான 30 க்கு 10 செ.மீ என்பது நிச்சயம் பராமரிக்கப்படும். இதன் மூலம் எக்டேருக்கு 3Ð லட்சம் செடிகள் என்ற பயிர் எண்ணிக்கையை பராமரிப்பது எளிதாகும். இதில் சராசரி மகசூலை விட 20 சதவீதம் அதிக மகசூல் பெறலாம்.

விதை பரிசோதனை

எனவே விதைகளை.விதைப் பதற்கு முன்பாக விதைப் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். கோடை பயறு வகை பயிர்களை சாகுபடி செய்யும் விவசாயிகள் தங்களிடம் உள்ள அல்லது தாங்கள் விதைப்பதற்காக வாங்கியுள்ள விதையில் இருந்து 100 கிராம் விதை எடுத்து விதை பரிசோதனை அலுவலர், விதைப் பரிசோதனை நிலையம், காஞ்சீபுரம் என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

பரிசோதனைக் கட்டணமாக ரூ.30 ஐ நேரடியாகவோ தபால் மூலமாகவோ அனுப்பி வைத்து பரிசோதனை முடிவுகளை பெற்று கொள்ளலாம்.
இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## பண்ணைக்குட்டை அமைப்பது சம்பந்தமாக விவசாயிகளுடன் கலந்தாய்வு கூட்டம்

திருமானூர்

அரியலூர் மாவட்டம், திருமானூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பண்ணைக் குட்டை அமைப்பதற்கும், மீன் வளர்ப்பு சம்பந்தமான விவசாயிகள் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது.

**கலந்தாய்வு கூட்டம்**

அரியலூர் மாவட்டம், திருமானூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பண்ணைக் குட்டை அமைப்பதற்கும், மீன் வளர்ப்பு சம்பந்தமான விவ சாயிகள் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது

இந்த கூட்டத்தில் மாவட்ட கலெக்டர் ரவிக்குமார் தலைமை தாங்கி பேசுகையில் மாவட்ட நீர்வடிப்பகுதி மேம் பாட்டு முகமை திட்டத்தின் கீழ் 158 பண்ணைக்குட்டைகள் இயந்திரங்கள் மூலமாக அமைத்து கொடுக்கப் பட்டுள் ளது. இத்திட்டத்தில் பயன் பெறுவதற்கு சிறுகுறு விவசா யிகள் 10 சதவீத பங்களிப்புத் தொகையும், ஆதிதிராவிடர் 5 சதவீத பங்களிப்புத்தொகை வழங்கி னால் மட்டும் போதும் .மேலும், மீன் வளர்ப்புத் துறையின் மூலம் பண்ணைக் குட்டைகளில் மீன் குஞ்சுகள் வளர்ப்பதற்கு ஆண்டுக்கு ரூ.30 ஆயிரம் மானியத் தொகையும், மீன்வளர்ப்புக்கு ரூ.17 ஆயிரத்து 500 மானியத்தொகையாக வழங்கப்படும். மீன் வளப்புத் துறையின் மூலம் 500 பண்ணைக்குட்டை மீன் வளர்ப்புக்கு ஒதுக்கீடு செய்யப் பட்டு, 100 குட்டைகளில் மீன் குஞ்சு வளர்ப்பிற்கும், 400 குட்டைகளில் மீன் வளர்ப்பும் செய்யப்படும். குட்டைகளில் வளர்க்கப்படும் மீன்களை மீன் வளத்துறையே விற்று கொடுக்கும். விவசாயத்திற்கு பயன்படும் மின் இணைப்பு மூலம் செயல்படும் மோட்டார் களை மீன் குட்டைகளுக்கும் பயன்படுத்தி கொள்ளலாம்.

இவ்வாறு மாவட்ட கலெக் டர் ரவிக்குமார் பேசினார்.

**விண்ணப்பங்களை வழங்கினர்**

தேசிய ஊரக வேலை வாய்ப்புத்திட்டத்தின் கீழ் பண்ணைக்குட்டை அமைக்க வுள்ள விவசாயிகள் விண் ணப்பங்களை உடனடியாக வழங்குமாறு கேட்டுக் கொண் டதன் அடிப்படையில் விவ சாயிகள் மகிழ்ச்சியுடன் விண்ணப்பங்களை வழங்கி னார்கள்.

இக்கூட்டத்தில் திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) முனியசாமி, இணை இயக்குநர் (வேளாண்மை) குண சேகரன், உதவி இயக்குநர் (மீன் வளத்துறை) திருநாவுக் கரசு, மாவட்ட நீர் வடிப்பகுதி திட்ட அலுவலர் சங்கரலிங் கம், மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**ஊராட்சி மன்ற தலைவர்கள்**

இதேபோல் ஊராட்சி மன்ற தலைவர்களுக்கான கலந் தாய்வு கூட்டம் நடை பெற்றது. இந்த கூட்டத்தில் திரு மானூர் ஒன்றியக் குழுத் தலைவர் சீனிவாசன், துணைத் தலைவர் குமரவேல், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஸ்ரீதரன், கபிலன், ஒன்றிய அனைத்து ஊராட்சி மன்றத் தலைவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண் டனர்.